Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 216/2024 |
| Police station | : | தூக்கணாம்பாக்கம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW11 / PW8 |
| Name | : | சோமசுந்தரம் M.V Inspector |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 15.05.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது மதுரை மாவட்டத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவம் நடந்த சமயத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணி புரிந்தேன். கடந்த 31.07.2023ம் தேதி 15.00 மணியளவில் தூக்கணாம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண். 91/2023 சட்டப் பிரிவு 279, 304–அ இதசவில் வழக்கு விபத்தில் சம்பந்தப்பட்ட PY-05-D-1948 என்ற பதிவெண்கொண்ட மோட்டார் சைக்கிள் without Gear என்ற இரு சக்கர வாகனத்தை ஆய்வு செய்வதற்காக தூக்கணாம்பாக்கம் காவல் நிலைய போலிசார் அனுப்பி வைத்திருந்தார்கள். நான் மேற்படி வாகனத்தை பரிசோதனை செய்து Front body ratting assembly. right hand indicator damaged, Right hand silenceer muffler cut Front right rear view mirror damaged என்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வாகன

எண். TN-50-AB-1401 என்ற பதிவெண்கொண்ட NCV என்ற நான்கு சக்கர வாகனத்தை ஆய்வு செய்வதற்காக தூக்கணாம்பாக்கம் காவல் நிலைய போலிசார் அனுப்பி வைத்திருந்தார்கள். நான் மேற்படி வாகனத்தை பரிசோதனை செய்து கடந்த 13.07.2023ம் தேதி 16.20 மணிக்கு Front right rear view mirror damaged என்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

மேற்சொன்ன இரு சக்கர வாகனங்களில் உள்ள சேதாரங்கள் மரத்தில் இடித்தால கூட ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனங்களை சம்பவம் நடந்து 21 நாட்கள் கழித்து தான் என்னிடம்ஆய்வுக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான்.மேற்சொன்ன இரண்டு வாகனங்களும் 21 நாட்கள் எங்கு இருந்தது என்று என்னால்சொல்ல முடியாது என்றால்சரிதான். சம்பவ இடத்திற்கு சென்று நான் எந்த ஆய்வும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான்.